# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஊத்தங்கரை
# கிருஷ்ணகிரி மாவட்டம்

**முன்னிலை : திரு. P. சுந்தரமூர்த்தி,** B.Com., LL.M.,
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஊத்தங்கரை (மு.கூ.பொ.)**

**2026-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 06–ம் நாள் செவ்வாய்கிழமை**

## I.A.No. 06/2024 in O.S.No. 124/2013

**CNR.No.TNKI13-000055-2013**

ரவிசுந்தரம் ...மனுதாரர் / 4–ம் பிரதிவாதி

//எதிர்//

சின்னம்மாள் ...எதிர்மனுதாரர் / வாதி

இந்த இடைமனுவானது 08.10.2025 அன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்து, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. P. சண்முகம், மற்றும் திரு. R. சந்திரசேகரன், அவர்களும் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. மூர்த்தி, அவர்களும் முன்னிலையாகி, இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு, வழக்கு கோப்புக்கள் பரிசீலிக்கப்பட்டு, இந்நாள்வரை ஆய்வில் இருந்த இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கும்:

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது கட்டளை VIII விதி 9 சி.பி.சி–ன் கீழ் கூடுதல் எதிர்வழக்குரை மற்றும் பிரதிவாதி தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்ய அனுமதி வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரரின் மனுஉரை சுருக்கம்:**

2(i). மனுவில் மனுதாரர் அசல் வழக்கில் 4-ம் பிரதிவாதி, மற்றும் இம்மனுவில் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். எதிர்மனுதாரர்/வாதி மேற்படி வழக்கினை மனுதாரருக்கு எதிராக பாகம்

கோரியும் 26.10.2010 தேதியிட்ட ஆவண எண். 4946/2010 ஆவணத்தை செல்லாது என விளம்புகை செய்ய கோரியும் மற்றும் நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் பல பொய்யான விவரங்களை தெரிவித்து தாக்கல் செய்துள்ளார்.

2(ii). மேற்படி மனுதாரர் எதிர்வழக்குரை தாக்கல் செய்தபோது கூட்டுக்குடும்ப தாவா சொத்து குறித்தும் உறவுமுறைகள் குறித்தும் மனுதாரரின் தந்தை விடுதலை ஆவணம் ஏற்படுத்தியது குறித்தும், 5, 6 பிரதிவாதிகளுக்காக எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலவில்லை. மனுதாரர் தரப்பில் நல்ல எதிர்வியாஜ்ஜியம் உள்ளது, வழக்கு சொத்து குறித்து அனைத்து ஆவணங்களையும் சேகரித்து எதிர்வழக்குரை தாக்கல் செய்ய யாரிடம் அறிவுரை கேட்க வேண்டும் என்பது தெரியாமல் போய்விட்டது, தற்பொழுது மேற்படி ஆவணங்களை சேகரித்து கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரரின் எதிருரை சுருக்கம்:**

3(i). எதிர்மனுதாரர், மனுவில் கூறியுள்ள சங்கதிகளை மறுத்துரைத்து, மனுதாரர் வழக்கில் வெற்றிபெற முடியாது என்பதை நன்குணர்ந்து இந்த எதிர்மனுதாரரை வீணாக அலைகழிக்கவும், கனம் நீதிமன்றத்தாரின் பொன்னான நேரத்தை விரையம் செய்யவும் வேண்டி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளதால் மனுதாரரின் மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தாவிடப்பட வேண்டிய ஒன்றாகும். மேலும் மனுதாரர் ஏற்கனவே எதிர்வழக்குரை தாக்கல் செய்தபோது ஆவணங்கள் கிடைக்கப்பெறவில்லை என்றும், அவரது தந்தை விடுதலை ஆவணம்

எழுதியது குறித்து எதிர்வழக்குரையில் குறிப்பிடாமலும் விட்டுவிட்டதாகவும் அதனால் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அனுமதி வேண்டி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும் பொய்யாக குறிப்பிட்டு இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளதால் மனுதாரரின் மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

3(ii). மனுதாரரின் மனுவில் எவ்வித உண்மையும் இல்லை. தாவாவில் மனுதாரர்/4-ம் பிரதிவாதி கடந்த 08.10.2015 தேதியில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும்போது கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் உரிமையை கோரவில்லை. அதனால் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் உரிமையை இழந்துவிட்டதால் மனுதாரரின் மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட வேண்டிய ஒன்றாகும் என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. தீர்வுகாண வேண்டிய வினா:**

4(i). இம்மனுவில் முக்கியமாக தீர்மானிக்கப்பட வேண்டியது என்னவென்றால் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்.

**5. சாட்சியம்:**

5(i). இம்மனுவிற்கு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் எதுவும் முன்னிடப்படவில்லை.

**விவாதம்:**

6. அசல் வழக்கில் 4-ம் பிரதிவாதியான இந்த மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் தனது தரப்பில் கூடுதல் பதிலுரை தாக்கல் செய்ய அனுமதி வேண்டி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். வழக்கு ஆவணங்களை

பரிசீலனை செய்ததில் அசல் வழக்கில் மனுதாரர் தரப்பில் வழக்கறிஞரை நியமனம் செய்து கடந்த 08.07.2014–ம் தேதியில் வக்காலத்து தாக்கல் செய்யப்பட்டு பதிலுரைக்காக வாய்தாக்கள் வழங்கப்பட்டு நிலுவையில் இருந்து வந்த சமயத்தில் இந்த மனுதாரர் தரப்பில் பதிலுரை தாக்கல் செய்யாத காரணத்தால் கடந்த 04.12.2014 தேதியில் இந்த மனுதாரருக்கு எதிராக அசல் வழக்கில் ஒருதலைபட்ச உத்தரவு ஏற்பட்டுள்ளது. அதன்பின்னிட்டு மற்ற பிரதிவாதிகள் பதிலுரை தாக்கல் செய்து வழக்கு நிலுவையில் இருந்து வந்த சமயத்தில் கடந்த 04.01.2019 தேதியில் வாதியானவர் விசாரணைக்காக முன்னிலையாகாத காரணத்தால் அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்பின்னிட்டு அசல் வழக்கானது கடந்த 11.06.2024 தேதியில்தான் மீண்டும் கோப்புக்கு எடுக்கப்பட்டு விசாரணைக்காக பட்டியலிடப்பட்டு விசாரணையில் இருந்து வருகிறது. இந்த மனுவில் மனுதாரரானவர் கடந்த 04.12.2014-ம் தேதிக்கு பின்னிட்டு அசல் வழக்கில் தனக்கு எதிராக வழங்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்ய கோரி அசல் வழக்கில் எந்தவிதமான மனுவும் தாக்கல் செய்து மனுதாரருக்கு எதிராக ஏற்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவு ரத்து செய்யப்பட்டதாக வழக்கு ஆவணங்களிலிருந்து அறிந்து கொள்ள முடியவில்லை. அதன்படி அசல் வழக்கில் மனுதாரருக்கு எதிராக வழங்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவு தற்போது வரை நடைமுறையில் இருந்து வருகிறது. இந்த சமயத்தில் அசல் வழக்கில் கூடுதல் பதிலுரை தாக்கல் செய்ய வேண்டும் என்று அனுமதி கோரி மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

7. வழக்குக் கோப்புகளை பரிசீலனை செய்கையில் மனுதாரர் தரப்பில் கடந்த 17.09.2019 தேதியில் பதிலுரையானது நீதிமன்றத்தின்

அலுவலகத்தில் தாக்கல் செய்யப்பட்டு அது வழக்கு கோப்பில் சேர்க்கப்பட்டுள்ளதும் தெரிய வருகிறது. ஆனால் மனுதாரர் பதிலுறை தாக்கல் செய்த சமயத்தில் அசல் வழக்கானது நிலுவையில் இல்லை, தள்ளுபடி செய்யப்பட்டு இருந்துள்ளது. மேலும் அவர் தாக்கல் செய்துள்ள பதிலுரையானது வழக்கின் கோப்பிற்கு ஏற்றுக்கொள்ளப்படாமலேயே இருந்து வருகிறது. தற்போது வரை இந்த மனுதாரர் ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய எந்தவித மனுவும் தாக்கல் செய்யப்படாததால் இந்த மனு நிலைக்கதல்ல என்று நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவில்,** இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை .

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 06-ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/- XXXXX

மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC)
ஊத்தங்கரை

**இணைப்பு**

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:** இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:** இல்லை

Sd/- XXXXX

மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)
ஊத்தங்கரை